# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : DVC 9/2022. | Date | : 27.12.2024 |
| Deposition of Witness for | : எ.சா.1 | Taluk | : |
| Name | : உதயகுமார் | Calling | : |
| Father / Husband Name | : | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 27.12.2024

**குறுக்கு விசாரணை** :–

1) திருமணத்தின்போது பெண் வீட்டார் எனக்கு எவ்வளவு தங்க நகைகள் அணிவித்தார்கள் என்றால் எனக்கு எதுவும் கொடுக்கவில்லை. மொத்தமாக 11 1/4 பவுன் தங்க நகைகள் எனக்கு கொடுத்தார்கள் அதை பிடிங்கிக்கொண்டு மனுதாரரை நான் துரத்திவிட்டதால் தற்போது தங்க நகைகள் எனக்கு கொடுக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பைனான்ஸ் மூலம் கடன் பெற்று கார் வாங்கியதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. பைனான்ஸ் நிறுவனத்தின் மூலம் நான் கடன் பெற்று கார் வாங்கியதாக கூறுவது பொய் என்றும் மேலும் மேற்படி கடன் தொகையை திரும்ப செலுத்தாததால் பைனான்ஸ் நிறுவனத்தினர் காரை கொண்டு சென்றுவிட்டார்கள் என்று கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் கார் ஓட்டுநராக வேலை செய்தேனா என்றால் ஆமாம். அவ்வாறு ஓட்டுநராக இருந்த சமயத்தில் மது பழக்கத்திற்கு நான் அடிமையாகிவிட்டேன் என்றால் இல்லை. அவ்வாறு மது அருந்திவிட்டு

வந்து என் மனைவியை எப்போதும் அடித்து துன்புறுத்துவேன் என்றால் சரியல்ல. திருமணத்தின்போது மனுதாரரின் பெற்றோர் வரதட்சணையாக பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் திருமணத்திற்கு பின்னிட்டு 15 இலட்சம் வரதட்சணை வாங்கிவருமாறு நானும் எனது சகோதரியும் எனது தகப்பனாரும் மனுதாரரை அடித்து துன்புறுத்தினேன் என்றால் சரியல்ல.

**(மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Sd/-Uthayakumar

Sd/-S.R.Babu,
Judicial Magistrate No.I,
Sankari.